Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 06 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ புரட்டாதி மீ 05 உ வெள்ளிக்கிழமை (21-09-1990) ஹிஜ்ரி 1411 ரபி. அப்.01 ஓசை 215

## வெளிநாட்டுநாணயத்தையும் அகதிகள் மாற்றலாம்

(சென்னை)

தமிழகத்தில் உள்ளஇலங்கைத் தமிழ் அகதிகள் இலங்கை நாணயத்தை மட்டுமல்லாமல் வெளிநாட்டு நாணயத்தையும் தமிழ் நாட்டில் மாற்றிக் கொள்ளலாம் என அகதிகளுக்கான விசேட ஆணையாளர் ராமதாஸ் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் அகதிகளுக்காக இதுவரை 10000 குடில்கள் அமைக்கப்பட்டு விட்டதாகவும், (4ஆம் பக்கம் பார்க்க)

### மொஸாட் உளவாளியின் திடுக்கிடும் தகவல்

# மொஸாட் உதவியுடன் ஜே.ஆர்.

# உலக வங்கியை ஏமாற்றினார்

## அணுதொழில்நுட்பத்திற்காக இந்திய விஞ்ஞானிகள் இஸ்ரேல் சென்றனர்

(மொன்றியல்)

ஆயுதக் கொள்வனவிற்காக முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா உலகவங்கியையும், ஏனைய முதலீட்டாளர்களையும் மொஸாட்டின் உதவியுடன் ஏமாற்றினார் என்றும், இந்தியா அணுகுண்டு தொழில் நுட்பத்தைப் பெறுவதற்காக இஸ்ரவேலுக்கு இரகசிய உயர் அணு விஞ்ஞானிகள் குழுவொன்றை அனுப்பியதாகவும் முன்னாள் மொஸாட் உளவாளியும், ஆயுத பரிசோதனை நிபுணருமான விக்டர் அல்போல் சுல் தான் எழுதிய புத்தகத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் அப்புத்தகத்தில் மொஸாட் அமைப்பில் தூர கிழக்காசிய பகுதிக்கென ஒரு பிரிவு இயங்குவதாகவும், அப்பிரிவு அப்பகுதியில் யாருக்கு ஆயுதம் தேவைப்படுகின்றது என்பதைக் கண்டறிவதும், அவர்களுக்கு ஆயுத விநியோகம் செய்வதுமே பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளதாகவும், அடுத்து அந்நாடுகளில் இஸ்ரேலிய தூதரசத்தைத் திறப்பதையுமே நோக்கமாகக்கொண்டும் செயற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலிடம் ஆயுதம் வாங்கச் சம்மதிக்கும் நாடுகளிடம் அங்கு உற்பத்தியாகும் பயிர்ச் செய்கை உபகரணங்களையும் தாம் வாங்கும்படி வற்புறுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பத்து வீடுகளைப் படையினர் தீ வைத்துக் கொளுத்தினர்

(வவுனியா)

வவுனியா காத்தார்சின்னக்குளம் இராணுவ முகாமிலிருந்து முன்னேறிவந்த இராணுவத்தினர் மகா இறம்பைக்குளம் பகுதியில் தமிழ் மக்களின் பத்துக்கு மேற்பட்ட வீடுகளுக்குத் தீ வைத்துக் கொளுத்தினர்.

இச்சம்பவம் கடந்த 18ஆம் திகதி மாலை இடம் பெற்றது.

துப்பாக்கி பிரயோகத்தில் ஈடுபட்டுக் கொண்டு மேற்படி இராணுவ முகாமிலிருந்து வந்த நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் காத்தார் சின்னக குளத்திற்கு அருகில் அமைந்துள்ள மகா இறம்பைக் குளம் பகுதியில் உள்ள தமிழ் மக்கள் இடம் பெயர்ந்து சென்ற வீடுகளுக்குத்தீவைத்து எரித்தனர்.

இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு ஒரு மாடு இறந்ததாகக் கூறப்பட்டது.

இச்சம்பவத்தின் பின் மீண்டும் இராணுவத்தினர் முகாமுக்குள் முடங்கிக் கொண்டனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)



விமானம் குண்டுவீச்சால் அழிந்த வெலிங்டன் திரையரங்கும், மயான அமைதி நிலவும் ஸ்ரான்லி வீதியும்.

## வவுனியா பொதுச்சந்தை பழைய சந்தைக்கு திடீர்மாற்றம்

(வவுனியா)

வவுனியா பொதுச்சந்தை கோவில்குளம் பகுதியிலிருந்து நகரத்தின் பழைய சந்தைப் பகுதிக்குத் திடீரென்று மாற்றப்பட்டது.

19ஆம் திகதி காலை இராணுவ அதிகாரிகளும் அரச அதிகாரிகளும் இச்சந்தையைப் பழைய இடத்திற்கு மாற்றும்படி கூறியதையடுத்து கோயில்குளம் பகுதியில் இயங்கிவந்த சந்தை, மேற்படி நகரத்தின் பழைய சந்தைப் பகுதிக்கு மாற்றப்பட்டது.

கடந்த ஜூன் மாதம் இடம் பெற்ற இராணுவநடவடிக்கைகளை அடுத்து வவுனியா குளவெளிப் பகுதியில் சந்தை இயங்கி வந்ததும், பின்னர் இம்மாதம் முறபகுதியிலிருந்து கோவில்குளத்தில் அமைக்கப் பட்டிருந்ததும் தெரிந்ததே.

(தி)

## சவளக்கடையில் பெண்கள் இராணுவத்தால் மானபங்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சவளக்கடைப்பகுதியில் கோயில்களிலும், பாடசாலைகளிலும் அகதிகளாக தஞ்சமடைந்தவர்களில் 35 தமிழ்ப் பெண்களை அங்கு புகுந்த சிறிலங்கா இராணுவத்தினரும், முஸ்லிம் ஊர்காவற் படையினரும் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தி உள்ளனர். இதனால் அங்கு தங்கி இருந்த மக்கள் இடம்பெயர்ந்து மண்டூர் சென்றுள்ளனர்.

## 35 தமிழ் இளைஞர்கள் சவளக்கடை முகாமில் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரும், முஸ்லிம் ஊர்காவற் படையினரும் இணைந்து 35 தமிழ் இளைஞர்களைச் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

இப்படுகொலை பற்றித் தெரிய வருவதாவது;

சொறிகல்முனைஎன்ற கிராமத்தைச் சுற்றிவளைத்த இராணுவத்தினரும், முஸ்லிம் ஊர்காவற் படையினரும் 35 தமிழ் இளைஞர்களைக் கைது செய்து சவளக்கடைஇராணுவ முகாமிற்கு அழைத்துச்சென்று அங்கு அவர்களைச் சுட்டுக் கொலை செய்தனர். (க)

## யாழ். நிலைமை பற்றிக் கொழும்பில் அரசஅதிகாரிகளுக்கு விளக்கினேன்

(யாழ்ப்பாணம்)

பலதரப்பு அத்தியா அவசிய தேவைகள் அதிகாரிகளுடனும் கொழும்பில் பேச்சுக்களை நாத்திவிட்டு நேற்று முன்தினம் யாழ். அரசாங்க அதிபர் அன்டன அல்பிரட் யாழ்நகர் திரும்பினார். அவர் கொழும்பில் தாம் நடாத்திய முக்கிய பேச்சுகளின் விடயங்கள் குறித்து தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் அரசின் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்டுள்ள

### யாழ். அரசஅதிபர்

பசி பட்டினி நிலைமை, அகதி வாழ்க்கை, அரசாங்க உத்தியோகஸ்தரின் வேலையற்ற நிலைமை போன்ற பல்வேறு (6 ஆம் பக்கம் பார்க்க)

## மனஸ்தாபத்தால் தற்கொலை

(வேலணை)

வீட்டில் ஏற்பட்ட மனஸ்தாபத்தால் மன முடைந்த ஜன சக்தித் திட்டத்தில் ஆசிரியைத் தொழில் செய்துவந்த செல்வி பவானி சண்முகம் (வயது 20) நச்சுத்திரவகத்தை அருந்திக் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று வேலணை 8 ஆம் வட்டாரத்தில் இடம்பெற்றிருக்கிறது.

(14)

## சுன்னாகத்திலும் குண்டுவீச்சு

(சுன்னாகம்)

சுன்னாகம் முத்துக் கிருஷ்ணர் வீதியில் நேற்று மதியம் 12 மணியளவில் பொம்மரில் இருந்து முதலாவதாக வீசிய குண்டுக்கு சுவாமிநாதன் மில் பலத்த சேதமடைந்தது. இரண்டாவதாக வீசிய குண்டு மில்லிற்கு வடக்குப் பக்கமாக உள்ள தென்னந்தோப்பில் விழுந்து வெடித்ததில் மூன்று தென்னைமரங்கள் அரைவாசி முறிந்த நிலையில் காணப்பட்டன.

மேலும் இப்பகுதியில் ஹெலி சரமாரியாக வேட்டுக்களைதீர்த்ததினால் அங்குள்ள வீடுகளின் ஓடுகள் நொருங்கின. இச்சம்பவத்தில் எவருக்கும் காயமோ உயிர்சேதமோ ஏற்படவில்லை. இச்சம்பவம் நடைபெற்ற சிறிது நேரத்தில் வசாவிளான் புன்னாலைக் கட்டுவன் பகுதிகளில் சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதுடன் பொம்மர் குண்டுவீச்சும் இடம்பெற்றது.

# ரேகாவிற்கு மட்டுவிலில் மக்கள் அஞ்சலி

(சாவகச்சேரி)
வீரவேங்கை ரேகாவிற்கு மட்டுவிலில் மக்கள் அஞ்சலி செலுத்திய பின்னர், அவரின் உடல், விடுதலைப் புலிகளின் இராணுவ மரியாதைகளுடன் கொண்டு சென்று வேம்பராய் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் இடம்பெற்றநேரடி மோதலின்போது மட்டுவிலைச் சேர்ந்த வீரவேங்கை ரேகா (செல்வி சுசீலா சங்கரப்பிள்ளை) வீரமரணமடைந்தார். இவரின் வீர அஞ்சலியில் தென்மராட்சி பகுதிப் பொறுப்பாளர் திரு தினேஸ், அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா ஆகியோரும் கலந்து கொண்டனர். (35)

## மகோற்சவம் ஒத்திவைப்பு

(பருத்தித்துறை)

இலங்கையின் வரலாற்றுப் புகழ்பெற்ற விஸ்ணு ஆலயமான ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

இம் மாதம் 19ஆம் திகதி புதன்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருந்த மகோற்சவம் தெய்வ அனுக்கிரகத்துடன் (தெய்வ ஆசியுடன்) ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

## வரிவிளம்பரம்

### இடம் மாற்றம்

ரதிவோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல 44, கஸ்தூரியார் வீதியிலிருந்து - இல 12, பொன்னையா லேன், ஆறுகால் மடம், ஆனைக்கோட்டையில் (பிடாரிகோயில் உப தபால் அலுவலகத்துக்கு அருகில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். (திருத்துதல் வேலையும் நடைபெறும்)

(R/ 137)

### தவறிவிட்டது

முக்கிய பத்திரங்களுடன் வேறு சில பொருள்களுடனும் இரண்டு சிகப்பு, நீல நிறங்களையுடைய பாடசாலை பைகள் (School Bags) காரிலிருந்து தவறிவிட்டது. இந்தப் பொருட்களைக் கண்டெடுப்பவர்கள் தயவு செய்து உதயன், ஈழநாதம் பத்திரிகை காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 26/1A திருநெல்வேலி சிவன்புதுவீதி, யாழ்ப்பாணம். (R/940)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 25-08-1939

இழப்பு: 21-06-1990

### மிக்கேல் மரிசிலின் அவர்கள்

(புகையிரத பாதுகாவலர், கல்லோயா
**Railway Head Guard**)

இருளில் எழுஞ்சுடராய் இன்பந்தரு நிழலாய்
கருணைத் திருஉருவாய் கலங்கரை விளக்கமதாய்
அருமைமிகு எங்கள் அன்புக்குல விளக்காய்
பெருமைமிகு எங்கள் பிரியத்துக்குரியவரே !
கருமேகம் சூழ்ந்த காரிருளில் பிரிந்தீர்கள்
உரிமையுடன் தினமும் உணர்வுடனே காத்திருப்போம் !

மனைவி கனகாம்பிகையும் பிள்ளைகளும்
தெல்லிப்பளை - பண்டத்தரிப்பு வீதி,
அளவெட்டி.

(B-1408)

## திலீபனின் 3ஆம் ஆண்டு நினைவாக



தோழனே !
நீ
எங்கள் தேசத்து விடுதலையில்
முள் நிறைந்த பாதையில்
முதல் சுவடு...

ஈழத் தாயகத்தில்
இடர் தீர்க்கவெழுந்த
ஆயிரமாயிரம்
சூரியப் பிளவுகளில்
நீ
சுடர் மங்காத
சுதந்திர விளக்கு !

அல்வாய் வடக்கு
வியாபாரி மூலை,
புலோலி மேற்கு,
புலோலி மத்தி

— சிற்றூரவைகள்

(B/1396)

### பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம்

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எடுத்த பெருமுயற்சி காரணமாக பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இடம் பெயர்ந்து தொழில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கென 40 மெட்ரிக் தொன் கோதுமை மாவுபூநகரி ப.நோ.கூ. சங்கத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. இவை குடும்ப அளவீட்டின் பிரகாரம் பூநகரி உதவி அரசாங்க அதிபரினால் அடுத்த வாரம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கான ஏற்பாட்டினை கிராமசேவை அலுவலர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### ஹெலிச் சூடு

நல்லூரில் 16-9-90 ஆம் திகதி பி. ப. 5 மணியளவில் யாழ்ப்பாணம் நோக்கி சென்ற ஹெலி ஒன்று லொறி ஒன்றின் மீது ஷெல் தாக்குதலை மேற்கொண்டது. இத்தாக்குதலின் போது நல்லூரைச் சேர்ந்த நாகலிங்கம் பொன்னம்பலம் என்பவருடைய வீடு சேதமுற்றது.

### விடத்தல் தீவில் பொம்மர் தாக்குதல்

மன்னார் விடத்தல் தீவில் நேற்றைய தினம் பொம்மர் ஒன்று கடும் தாக்குதலை மேற்கொண்டது. இத்தாக்குதலில் ஒரு சிலர் காயமுற்றனர். இப் பொம்மர் கடல் வழியாக வரும் போதே இத்தாக்குதலைமேற்கொண்டது

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### கந்தவனம் தவேந்திரன் (தவம்)

பிறப்பு 22-10-1963 இறப்பு 13-09-1988

(அமரத்துவ திதி 21.09.90)

ஆலமரமென நீயிருந்தாய் - அதனால்
காலமெல்லாம் எம்மைக் காத்திடுவாய்
என்றிருந்தோம்
சுவிஸ் மாநகரிலே - உன்னுயிரை
காலனவன் பாசக்கயிற்றினால் பறித்து விட்டான்
அதனால் பாலை வனமானதே - எம்வாழ்வு!

உன் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

ஞா. பா. வீதி,
கல்வியங்காடு.

உன் பிரிவால் வாடும்
தந்தை, தாய், சகோதரன்.

(R-641)


"சுழன்றும் ஏர்ப்பினது உலகம்" — திருவள்ளுவர்



நெற்பயிருக்குச் சிறந்த அடிக்கட்டுப் பசளை

# நீமியா உரம்

வேப்பம் பிண்ணாக்கை மூலாதாரமாகக் கொண்டு தயாரித்த உரம்.
தழைச்சத்து விரயமாவதைத் தடுத்துப் பெருவிளைச்சலுக்கு உதவுகிறது.
வீட்டுத் தோட்டத்திற்கும் சிறந்த பசளை!

**ஒரு கிலோ பைக்கற் ரூபா 5-00 மட்டுமே.**

தொகையாக வாங்குவோருக்குச் சகாய விலை. அரிய விவசாயக் கைநூல் இலவசம்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

(B. 1405)

## திலீபனின் நினைவாக...

உயிரைக்கொடுத்து



### உயிர்க்கவைத்தவன

சமாதியாகிவிட்ட சரித்திரமொன்றுக்கு
உயிர் கொடுத்தவன் நீ
இந்தியாவின் வடக்கில் பிறந்திருந்தால்
பூகோளமே உன்னைப் பூஜித்திருக்கும்
ரசியா சிலைவைத்திருக்கும்
அமெரிக்கா முத்திரை குத்தியிருக்கும்
என்னமோ
எமது மண் தேசப்படத்திலிருந்து
திருடப்பட்டு விட்டது போலும்.
காவில் பணியும்
வாழ்வை எதிர்த்து
கல்லறைக்குப் போகும் நீ
இந்தியாவோ
காந்தியை உச்சாடனம் செய்து கொண்டு
கிட்லரைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கிறது
நீயோ அந்த
சுவாசிக்க முடியாதவர்களுக்காக
உனது மூச்சையே விட்டுவிட்டாய்
இதோபார்;
உன் அகிம்சைக்குப் பின்னால
ஒரு கோடி மகாத்மாக்கள்
உட்கார்ந்திருக்கிறார்கள்
இந்த 'மண்'ணுடலுக்கு
ஒரு புது ஜீவததுடிப்பு துவங்கியிருக்கிறது
நீ உண்ணாமலிருந்து விட்டகாற்று
இங்கு உலாவுவதால்;
வாழ்வதற்கு உரிமை கேட்டு
சாகத்துணிந்தவர் சாவில் - நீ
வாழ்ந்து கொண்டிருக்கிறாய்!

- சந்திரபோஸ்

## பார்த்திபன் கனவு

பார்த்திபன் கனவு நிச்சயம் பலிக்கும்
பாரினில் தமிழீழ தாயகம் பிறக்கும்
ஆர்த்தெழும் கடலாய் மக்களின் உணர்வும்
ஓர்திசை குறித்தெழ பேரிகை முழக்கும்!
போர்த்துறை மருவி வெற்றியை அணைக்கும்
பாவியர் அராஜக ஆட்சியும் மரிக்கும்!
சீர்த்திடம் உயர சத்தியம் செழிக்கும்
சாபமே இலவெனும் ஓர்யுகம் உதிக்கும்!

'திலீபம் என்றோர் தத்துவம் நிலைக்கும்
தியாக வாழ்வின் பொற்சிலை நிறுவும்
இழிவே கண்டான் தமிழன் பிளவால்
அதனை ஆழ்த்தி இச்சமர் இணைக்கும்!
புலியே அன்றோ; பற்றிடில் விடிவும்
புலநம் வேளை வந்திடும் வரையில்
நலிவே அற்றோர் கொத்தென தமிழர்
நிலையாய் வாழும் நற்றவம் மலரும்!

மலரும் உரிமை விடிவின் ஒளியை
மனத்துக் கண்ணால் மன்னவன் கண்டான்!
உலரும் உதடு உயிரை உமிழ
உளத்துத் தென்பால் உண்ணலும் விட்டான்!
பலரும் விழிநீர் உதிர்க்கும் நிலையை
படித்தே மண்ணில் தன்னுயிர் நட்டான்!
புலரும் புரட்சி தெலைவில் இலையே
பிடித்துச் செல்வோம் பார்ததிபன் பாட்டை!

- மாவை வரோதயன்


## அறிவித்தல்

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்த மஹோற்சவம், நாட்டு நிலைமை காரணமாகப் பின்போடப் பட்டுள்ளது. நடப்பு வருடம் முடிவதற்குள் நிலைமையை அனுசரித்து மஹோற்சவம் நடைபெறும். இதுபற்றிய அறிவித்தல் பத்திரிகை வாயிலாக வெளியிடப்படும். விரதம் அனுஷ்டிப்போருக்காக 19-09-91 தொடக்கம் 4-10-90 வரை தினமும் காலை 9-30மணிக்கு அபிஷேகமும் விசேஷ பூசையும் நடைபெறும்.

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய
- பரிபாலன சபை

R/637)


(நேற்றைய தொடர்ச்சி)

நவாலி-யாழ்ப்பாணக்குடா நாட்டில் ஒரு கிராமம். ஒரு நாள் இயக்கத் தோழர்களைக் காணச் சென்றிருந்த திலீபன் நவாலி தெரு ஒன்றில் அவர்களோடு பேசிக் கொண்டிருக்கின்றான். ஒரு சிங்கள பொலீஸ் ஜீப் வண்டி உறுமிக் கொண்டே பக்கத்து வீதியால் திரும்புகின்றது பதற்றம் எதுவும் இன்றி 'மெதுவாகக் கலைந்து செல்லுங்கள்' என்று நண்பர்களிடம் சொல்கிறான திலீபன் சூட்கேசும் கையுமாக எங்கோ பயணம் செய்கிறவனைப் போல் பஸ் தரிப்பு நிலையத்தில் அவன் வந்து நின்றான். ஜீப் வண்டி வேகமாகப் பக்கம் வருகின்றது. துப்பாக்கி தாங்கிய பொலீஸ்



# விடியலைத்தேடியதோழன்

# திலீபன்

காரர் ஜீப்பில் இருந்து தாவித் திலீபனை வளைத்துக் கொள்கிறார் 'போடா போய் ஜீப்பில் ஏறு' ஒரு பொலீஸ் காரன் உறுமுகிறான். திலீபனுக்கு நிலைமை புரிகிறது. அவன் ஒரு கெரில்லாப் போராளி நடுங்கிக்கொண்டே 'ஜீப்' வண்டியை நோக்கி நடப்பவனைப் போல் 'பாசாங்கு' செய்கிறான். திடீரென்று கையிலிருந்த 'சூட்கேசால்' பக்கத்தில் நின்ற பொலீஸ்காரனை ஓங்கி அடிக்கிறான் திலீபன். மின்னல்வேக நிகழ்வுகள் சிங்களப் பொலீஸ் படையின் இயந்திரத் துப்பாக்கிகள் அதிர்ந்து முழங்குகின்றன. ஆனால் திலீபன் அந்த நொடிபொழுதில் பக்கத்தில் இருந்த கடைக்குள் பாய்ந்து பின்புறமாகத் தப்பி விடுகிறான். அவனது இடது கையில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து இரத்தம் பொங்கி வழிகிறது... ஆம். குண்டுகளுக்கும் இரத்தத்துக்கும் நடுவலதான் திலீபன் வாழ்ந்தான்.

திலீபனின் இலட்சிய வெறி 24 மணி நேர உழைப்பு, அஞ்சாத வீரம், ஈடிணையற்ற போர் ஆற்றல், அரசியல் தெளிவு, மக்கள் நெஞ்சங்களைத்தொடும் திறன், இயக்கத்தைக் கட்டி வளர்க்கும் வல்லமை. இவற்றால் தான் யாழ் மாவட்டத் தளபதி இட்டு திலீபனை யாழ் மாவட்டத்திற்கு அரசியல் பெறுப்பாளர் ஆக்கமுடிந்தது.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் தொடர்ந்து நடத்திய கெரில்லாத் தாக்குதல்களின் விளைவு 1985 இன் நடுப்பகுதியில் படைமுகாம்களை விட்டு வெளியே நகர முடியாத நிலை சிறீலங்கா படைகளுக்கு ஏற்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசு நிர்வாகம் முற்றாகச் செயலிழந்தது. இந்த நேரத்தில் விடுதலைப் புலிகளின் நிழல் அரசாங்கத்தை நிறுவுவதில் திலீபன் இரவு பகலாக உழைத்தான்.

திலீபன் இந்தக் காலத்தில் பல அமைப்புகளை உருவாக்கினான். கிராம நீதி மன்றம் திலீபனால் உருவாக்கப்பட்டது. தமிழீழத்தின் பழைமைவாத, முதலாளித்துவ அமைப்பில் பாதிக்கப்பட்டவர்கள் இங்கு நிவாரணம் பெற்றார்கள்.

தமிழீழப் பெண்கள் அரசியல் தெளிவு பெறவும் ஆயுதப்போராளிகளாக மாறவும் தமிழீழ விடுதலைப் போரில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளவும் திலீபன் ''சுதந்திரப்பறவைகள்'' என்னும்மகளிர் அமைப்பைநிறுவினான். இந்த அமைப்பில் உருவாகிய பல பெண் விடுதலைப் புலிகளை இன்று களத்தில் பார்க்கிறோம்.

யாழ்ப்பாண குடாநாட்டிலுள்ள மாணவர்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி ''விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தை'' திலீபன் அமைத்தான். இந்த அமைப்பு பெரும் புயலாய் வீசிற்று. மாணவர்கள் தமிழீழ விடுதலைப்போரில் வெறிகொண்டு பாய்ந்தார்கள்.

கடல் தொழிலாளர் அமைப்பு - கலாசாரக்குழு - சீவல் தொழிலாளர் சங்கம் - கூலி விவசாயிகள் சங்கம் - அபிவிருத்திக்குழு - பத்திரிகையாளர் சங்கம் இவையெல்லாம் திலீபனால் நிறுவப்பட்டவை.

தமிழீழ மக்களைத் தொடர்பு கொள்ள ஒரு செய்தி ஏடு தேவை என்பதை உணர்ந்த திலீபன் 'களத்தில்' என்ற சூடான செய்தி ஏட்டை வெளியிட்டான். 'ஷெல்' கள் விழுந்து வெடித்துக்கொண்டிருக்கும் இரவு நேரங்களில் அவன் 'களத்தில்' ஏட்டுக்கு செய்தி திரட்ட வீதிகளில் நடந்து கொண்டிருந்தான். தூக்கமே இல்லாத இரவுகள்... அவன் விழித்திருந்து எழுதிய எழுத்துக்கள் யாழ். மாவட்டத்தில் மட்டுமல்ல-வவுனியா-திருக்கோணமலை - மட்டக்களப்பு - அம்பாறை இங்கெல்லாம் இருந்த விடுதலைப்புலிகளுக்கும் மக்களுக்கும் அமுதமாயிற்று.

சமூக-பொருளாதார - கலாசார விடுதலையை பல்வேறு அமைபபுக்கள் - ஏடுகள் போராட்டங்கள் மூலம் செயல் படுத்தி தமிழீழ மக்களின் முழுமையான விடுதலைக்கு வித்திட்டான்

திலீபன் ஆடம்பரங்களை வெறுத்தான். சுகம் அவனுக்குத் தேவைப்படவில்லை. கடைசிக் காலத்தில் அவன் கையில் இருந்தது ஒரு 'சேட்டும் பாண்டும்' மட்டுமே. இரவு 12 மணிக்கு இரண்டையும் தோய்த்துப் போடுவான். காலை 5 மணிக்கு மீண்டும் அவற்றையே பாதி ஈரத்தோடு அணிந்து கொள்வான்.

திலீபன் இந்தியாவை நேசித்தான். இந்திய அரசின் ஒப்புதலோடு தமிழீழத்தை வென்றெடுக்க வேண்டும் என்று உணர்வு பூர்வமாக நம்பியவன் அவன். 29-07-87 இல் ஏற்பட்ட ராஜீவ் - ஜெயவர்த்தனா உடன்படிக்கையை சிறிலங்கா அரசு மீறியபோது இந்திய அரசிடம் நீதி கேட்டு 5 அம்சக் கோரிக்கையை முன் வைத்துத் திலீபன் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டான். ஆனால் இந்திய அரசின் மௌனம் திலீபனைப் பிணம் ஆக்கிற்று.

இந்தியா மீது தமிழீழ மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைக்கு இந்திய அரசு வைத்த நெருப்புததான் 'திலீபன் மரணம்'

தமிழீழத்தைப் பொறுத்த வரை திலீபனின் மரணம் ஒரு புதிய எழுச்சியின் பிறப்பு ஆகியிருக்கிறது.

ஒவ்வொரு நொடிப் பொழுதும் இனி அந்த மண்ணில் போர்முரசு ஓங்கி முழங்கும்.

எத்தனை பெரியவல்லமையையும் தமிழீழ மக்கள் துணிச்சலோடு எதிர்கொள்வார்கள்.

அந்த மக்களுக்கு திலீபன் ஒரு புலி மட்டுமலல-திலீபன் ஒரு வழி.

நன்றி: தமிழீழம்

## திலீப வாசகங்கள்



''இந்த யாழ்ப்பாணக் கோட்டை இருக்கும் இடத்தில் சில நூற்றாண்டுகளுக்குமுன் தமிழனின் கொடி பறந்தது அந்தக் கொடியை போர்த்துக் கயர் பறித்து எடுத்தனர், போர்த்துக்கேயரிடம் இருந்து ஒல்லாந்தரும், ஒல்லாந்தரிடம் இருந்து ஆங்கிலேயரும் கைப்பற்றிக் கொண்டனர். ஆங்கிலேயரிடம் இருந்து சிங்களவர் கடைசியில் கைப்பற்றினர் இந்தக் கோட்டையிலே மீண்டும் தமிழ்க் கொடி புலிக்கொடி பறக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை. அந்த தமிழ்க் கொடியைப் பறக்க விடுவதற்காக ஒவ்வொருவரும் எமது உயிரை அர்ப்பணித்துக் கொண்டு வருகிறோம். இதில் என்பங்கு எப்போது என்பதுதான் எமது கேள்வியாக இருக்கவேண்டுமே தவிர, பதவிகள் எமக்குப் பெரிதல்ல. பதவிகளை தேடிச் செல்பவர்கள் புலிகள் அல்ல. அதற்கு வேறு ஆட்கள் இங்கே இருக்கிறார்கள்.

□ □ □

''எனது இந்த அஹிம்சை வழி அணுகுமுறையை இந்தியா பரிந்து கொள்ளாமலோ, தூக்கியெறிந்து விட்டோ போகலாம் அது பற்றிக் கவலை இல்லை ஆனால் அதன் மூலமாவது 'இந்தியாவைப் பற்றி நம்மக்கள் புரிந்து கொள்வார்களேயானால் அதுவே எனக்கு மகிழ்ச்சி தருவதாகும்''.

# 13 - 06 - 1990 க்குப்பின் ..
# திருக்கோணமலை குறித்த சில விபரங்கள்

★ **தம்பலகாமம் மகாவித்தியாலயம் அகதி முகாம்**

இந்த அகதி முகாமில் தம்பலகாமம், மேற்கு கொலனி, புதுக் குடியிருப்பு, 98ஆம் கட்டை, பாரதிபுரம், பத்தினிபுரம், பாலம்போட்ட ஆறு, முள்ளிப் பொத்தானை 9ஆம் கொலனி, கப்பல் துறை, விளாங்குளம், சுங்கான்குழி, பட்டியனூறு போன்ற பகுதிகளைச் சேர்ந்த தமிழ் மக்கள் தஞ்சமடைந்துள்ளனர், இந்த அகதி முகாமில் சுமார் 1700 குடும்பங்களைச் சேர்ந்த 6000 தமிழ் மக்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

★ **ஆலங்கேணி விநாயகர் மகாவித்தியாலயம் அகதி முகாம்**

இந்த அகதி முகாமில் ஈச்சந்தீவு, ஆலங்கேணி, பிள்ளை கொல்லிமணல், இடிமண் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். இம் முகாமில் சுமார் 500 குடும்பங்களைச் சேர்ந்த 2000 தமிழ் மக்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

★ கிண்ணியா பெண்கள் மகாவித்தியாலயத்தில் இருந்த அகதிகள் கிண்ணியா நெற்களஞ்சிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர். இந்த அகதிமுகாமில் சின்னக் கிண்ணியா சீனன் குடா, நாச்சிக்குடா, நெடுங்குடா, சின்ன யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அகதிகளாகதஞ்சமடைந்துள்ளனர். இம் முகாமில் சுமார் 150 குடும்பங்களைச். சேர்ந்த 500 தமிழ்மக்கள் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

★ முத்துநகர் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் முள்ளிப்பொத்தானை, கிண்ணியா, கந்தளாய் போன்ற பகுதிகளில் உறவினர், தனியார் வீடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். (சுமார் 60 குடும்பங்களைச் சேர்ந்த 200 மக்கள்).

★ சுடலைப்பிட்டி, மயிலப்பஞ்சேனை போன்ற பகுதிகளைச் சேர்ந்த சுமார் 144 குடும்பங்களைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி கிண்ணியாப் பகுதியில் அகதிகளாக தனியார் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

★ உப்பாறுபகுதியைச்சேர்ந்த சுமார் 59 குடும்பங்கள் இறால்குழி எனும் இடத்தில் தனியார் வீடுகளிலும் இறால்குழி பாடசாலையிலும் அகதிகளாக தஞ்சமடைந்துளளனர்.

★ 13-06-90 அன்று ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து தம்பலகாமம் பிரிவினுள் அகதிகளாக மரங்களின் கீழ் பொது இடங்களில் தஞ்சமடைந்திருந்த சங்குவேலி, புளியடிச் சோலை, பாரதிபுரம், (58ஆம் கட்டை), மல்லிகைத் தீவு, L. B. 3, மேன்காமம்., கிளிவெட்டி, பெரியவெளி, இருதயபுரம், பட்டித்திடல், பாலத்தடிச்சேனை, மணற்சேனை, மூதூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 938 குடும்பங்களைச் சேர்ந்த 3987 மக்கள் பச்சை நூல் தேவாலயத்திற்குச் சென்று அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்

## தம்பலகாமம் பிரிவில் தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறிய அகதிகள் விபரம்

| | | | |
|---|---|---|---|
| தம்பலகாமம் | - | 500 | குடும்பம் |
| மேற்கு கொலனி | - | 321 | ,, |
| 98ஆம் கட்டை | - | 70 | ,, |
| புதுக்குடியிருப்பு | - | 152 | ,, |
| பாரதிபுரம் | - | 196 | ,, |
| பத்தினிபுரம் | - | 50 | ,, |
| பாலம்போட்டாறு | - | 15 | ,, |
| முள்ளிப்பொத்தானை 9ஆம் கொலனி | - | 125 | ,, |
| சுங்கான்குழி, பட்டியனூறு | - | 64 | ,, |
| ஆலங்கேணி | - | 250 | ,, |
| ஈச்சந் திவு | - | 160 | ,, |
| கப்பல்துறை | - | 250 | ,, |
| விளாங்குளம் | - | 74 | ,, |
| பிள்ளை கொல்லி மணல், இடிமண் | - | 87 | ,, |
| சின்னகிண்ணியா | - | 86 | ,, |
| சினக்குடா | - | 140 | ,, |
| கந்தளாய் | - | 50 | ,, |
| உப்பாறு | - | 59 | ,, |
| சுடலைப்பிட்டி, மயிலப்பஞ்சேனை | - | 144 | ,, |
| முத்துநகர் | - | 60 | ,, |

☐ 13 - 06 - 90 அன்று ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து தம்பலகாமம் பிரிவினுள் அகதிகளாகத் தஞ்சமடைத்திருந்த மூதூர் பிரிவைச் சேர்ந்த சுமார் 938 குடும்பங்களைச் சேர்ந்த 3987 தமிழ் மக்கள் 06 - 07 - 90 அன்று பச்சைநூல் தேவாலயத்தில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

| இடம் | குடும்ப எண்ணிக்கை | மக்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| சங்குவேலி | 180 | 834 |
| புளியடிச்சோலை | 125 | 500 |
| பாரதிபுரம் (58) | 25 | 90 |
| மல்லிகைத்தீவு | 51 | 352 |
| L. B. 3 | 33 | 145 |
| மேன்காமம் | 24 | 107 |
| கிளிவெட்டி | 23 | 74 |
| பெரியவெளி | 175 | 1100 |
| இருதயபுரம் | 108 | 455 |
| பட்டித்திடல் | 16 | 77 |
| பாலத்தடிச்சேனை (முன்னம்போடிவெட்டை) | 21 | 99 |
| மணற்சேனை | 107 | 454 |
| மூதூர் | 50 | 200 |

### தங்க புரத்தில் எரிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்

1. வே. சண்முகநாதன்
2. சு. வைரமுத்து
3. சு. முத்துலிங்கம்
4. வி. புவிராசா
5. நா. தியாகராசா
6. க. தங்கராசா
7. க. கிருஷ்ணபிள்ளை
8. த. பரராசசிங்கம்
9. சி. வடிவேல்
10. ப. கயிலாயபிள்ளை
11. க. பரராசசிங்கம்
12. வை. தனபாலசிங்கம்
13. R. P. கணேஸ்
14. இ. யோகராசா
15. ப. அரசரெத்தினம்
16. மு. பூபாலபிள்ளை
17. இ. சுந்தரம்
18. இ. இராசசிங்கம்
19. வே. சண்முகநாதன்
20. ம. தங்கத்துரை
21. மா. சிவலிங்கம்
22. செ. மகேஸ்வரன்
23. அ. யோர்ச்றெபின்சன்

## பகுதி 2

### ஸ்ரீநிவாசபுரத்தில் எரிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்

1. மா. காளிமுத்து
2. இ. மாணிக்கம்
3. பொ. முருகையா
4. இ. கோபாலசிங்கம்
5. க. தெய்வானைப்பிள்ளை
6. வ. முத்துக்குமார்
7. இ. பாலசுப்பிரமணியம்
8. மா. ஆறுமுகம்
9. ஆ. ஜெயக்குமார்
10. செ. பிரான்சிஸ்
11. வ. செல்லத்தம்பி
12. சி. தங்கராசா
13. யோ. ரஞ்சிதம்
14. கா. நாகேஸ்வரி
15. இ. தையல்
16. இ; சுந்தரம்
17. பொ. முத்துலிங்கம்
18. இ. தெய்வநாயகம்
19. கா. செல்வரெட்னம்
20. வே. வேலாயுதம்
21. சி. லவன்
22. கா. கந்தசாமி
23. மு. தில்லைநாயகம்
24. சி. நாகலிங்கம்
25. செ. துரைநாயகம்
26. வே. சிவக்கொழுந்து
27. க. சித்திரவேல்
28. நா. கோணேஸ்வரி
29. பு. கணபதிப்பிள்ளை
30. க. யோகராசா
31. பொ- செல்வராசா
32. பொ. சிவக்கொழுந்து
33. செ. செல்வக்குமார்
34. சி. இராமப்பிள்ளை
35. வே. சிவஞானம்
36. செ. சிவபாலன்
37. ம. வருணகுலசிங்கம்
38. வே. தணிகாசலம்
39. கா. தெய்வநாயகி
40. க. அருமைப்பிள்ளை
41. செ. சபாரத்தினம்
42. செ. இராசதுரை
43. த. கணவதிப்பிள்ளை
44. கு. சிவராசா
45. சொ. சண்முகராசா
46. கு. கணேசன்
47. வீ. குணசேகரம்
48. த. சிவராசா
49. ஆ. மனோகரன்
50. சி. நாகேந்திரம்
51. க. பூபாலசிங்கம்
52. க. மாரிமுத்து
53. வ. மனோரஞ்சிதம்
54. த. வைரமுத்து
55. ச. சிவபாலன்
56. வ. விஸ்வலிங்கம்
57. ந. கணேசன்
58. கா. சுப்பிரமணியம்
59. இ. பாக்கியராசா
60. கா. நேசம்மா
61. பொ. தம்பிராசா
62. கு. கணேசன்
63. செ. இராசேந்திரன்
64. வே. மாரிமுத்து
65. கோ. செல்லப்பா
66. வே, தருமலிங்கம்
67. நா. கனகம்மா
68. ச. மயில்வாகனம்
69. இ. தெய்வானைப் - பிள்ளை
70. பொ. யோகநாயகி

### சம்பூரில் எரிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்

1. கா. வீரசிங்கம்
2. சு. பத்மநாதன்
3. க. சுகுணசேகரம்
4. க. கண்றாமணி
5. சொ. மனோன்மணி
6. இ. கனகமணி
7. வே. வைரமுத்து
8. மு. வேலுப்பிள்ளை
9. பிள்ளையார்கோயில் மடைப்பள்ளி
10. சா. தருமலிங்கம்
11. சி. பத்மநாதன்
12. சி. மாணிக்கராசா
13. யோ. சங்கர்
14. செ. கிருஷ்ணபிள்ளை
15. மா. கனகம்மா
16. வ. அருமைத்துரை
17. வே. ஸ்ரீதரன்
18. ம. விநாயகமூர்த்தி
19. செ. ரெத்தினம்
20. க. இராமுப்பிள்ளை
21. வ. குணநாயகம்
22. இ. சிவானந்தராசா
23. இ. பத்மநாதன்
24. செ. நாகராசா
25. இ. செல்லமாணிக்கம்
26. நா. பார்வதிப்பிள்ளை
27. க. லிங்கேஸ்வரன்
28. நா. சுந்தரலிங்கம்.

### சம்பூரில் களவாடப்பட்ட வீடுகளின் உரிமையாளர்

1. சி. கனகரெட்னம்
2. கோ. தங்கம்மா
3. வ. மகேந்திரம்
4. த. தர்மகுலசிங்கம்
5. க. செல்லத்துரை
6. தி. செல்வநாயகி
7. நா. யோகராசா
8. கு. மண்றாமணி
9. செ. புவனேஸ்வரன்
10. க. சித்திரவேல்
11. க. பேச்சிமுத்து
12. வ. குணநாயகம்
13. சி. கோபாலசிங்கம்
14. டா. சோமசுந்தரம்
15. வ. சோமசுந்தரம்
16. ஆ. நல்லதம்பி
17. இ. கோபாலபிள்ளை
18. அ. அழகம்மா
19. இ. பாக்கியரெட்ணம்
20. ந. சண்முகநாதன்.

### கானித்தீவில் எரிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்

1. இ. சுந்தரலிங்கம்
2. இ. இரத்தினசிங்கம்
3. வ. சுப்பிரமணியம்
4. க. ஜெயராசா
5. ம. சியாமளாதேவி
6. இ. மாணிக்கம்
7. ந கனகசூரியர்
8. ப. கனகம்மா
9. இ. அன்னரத்தினம்
10. மு தெய்வநாயகி
11. க. வில்வராசா
12. கோ. காளிராசா
13. வ. நாகராசா
14. செ. சோமசுந்தரம்
15. கதிர்காமத்தம்பி
16. கா. சிவராசா
17. வி. தம்பிமுத்து
18. த. நமநாதன்
19. ந. அமிர்தலிங்கம்
20. சி. இரத்தினசிங்கம்
21. பொ. காளிக்குட்டி
22. க. தவராசா
23. பொ. அன்னபூரணம்
24. வ. மாணிக்கராசா
25. தங்கவடிவேல்
26. செ. தருமலிங்கம்
27. வை. யோகநாதன்
28. ஜீ பத்மினிதேவி.

### நவரெத்தினபுரத்தில் எரிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்

1. சி. மாரிமுத்து
2. ஐ. நாகையா
3. ப. ஐயாத்துரை
4. கோ. கயிலாயநாதன்
5. ஏ. தையல்முத்து
6. ஞ. இந்திராணி
7. சு. சிவசந்திரன்
8. ச. கௌரிதேவி
9. கா. மகேஸ்வரி
10. க. ஜீவானந்தராசா
11. ஏ. குணசேகரம்
12. க. பத்தம்பை
13. சு. காளிப்பிள்ளை
14. வே. சாம்பசிவம்
15. சி. விமலாதேவி
16. அ. தியாகராசா
17. வே. தவசிங்கராசா
18. தி. ரவீந்திரன்
19. இ. உதயகுமார்
20. கோ. நந்தகுமார்
21. ந. இரத்தினசிங்கம்
22. பெ. விஜேந்திரன்
23. க. மாதவராசா
24. ந. விமலாதேவி.

### மூதூரில் எரிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்

1. க. சித்திரவேல்
2. ஸ்ரீ. ஜெகதாம்பாள்
3. கோ. விஜயராணி
4. ந. யோகம்மா
5. த. மஞ்சுளா
6. சி. தருமரத்தினம்
7. கா. சிவரெட்ணம்
8. வை. இலச்சுமிகாந்தன்
9. அ. ஜோதிலிங்கம்
10. அ. செல்வரத்தினம்
11. மா. கந்தசுவாமி
12. இ. ரகுநாதன்
13. க. சரவணமுத்து
14. கா. அரசரெத்தினம்
15. கா. சிவராசா
16. க. செல்வராசா
17. ஜி. பத்மினிதேவி
18. வை. தியாகராசா
19. இ. ரகுநாதன்
20. மா. கந்தசாமி

(தொடரும்)

## சிந்தனைக்கு

ஒரு மகத்தான புனிதமான இலட்சியத்தில் வைத்திருக்கும் ஆழ்ந்தபற்றே, இளைஞர்களைப் புன்சிரிப்புடன் தூக்குமேடை ஏறும்படி செய்கிறது

— பகவத்சிங்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம் 21-09-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

## விடுதலை வீரனின் மரணமும் ஜனனமே!

சிறிலங்கா இராணுவ வீரனே, நீ விடுதலைப் புலிகளுக்கு என வானத்தில் இருந்து போட்ட துண்டுப் பிரசுரம் எங்கள் கைக்கு எட்டியது. அதை வாசித்த நாம் உரிமைப் போராட்டம் நடத்தும் தமிழ் மக்களின் சார்பில் சில விடயங்களை உனக்குச் சொல்ல வேண்டும்.

உனது துண்டுப் பிரசுரத்தில், யுத்தத்தில் ஈடுபடும் உனக்கு அரசாங்கத்தின் சார்பில் வழங்கப்படும் வருவாயும் - சம்பளம், மரணமானால் அதற்குரிய நஷ்டஈடு, ஓய்வூதியம் - பற்றிக் குறிப்பிட்டிருந்தாய். ஆம்! அது உண்மைதான். அதனால்தான் நாங்கள் உங்களைக் கூலிப்படைகள் என அழைக்கின்றோம்!! உங்களின் அடக்குமுறைக்கு எதிராகப் போராடுபவர்களை விடுதலைப் போராளிகள் என அழைக்கின்றோம்!!!

இராணுவ வீரனே, நீ உனது உயிரைப் பணயம் வைத்து, உடலை வருத்தியே சம்பளம் பெறுகின்றாய். அதாவது உனது உடலை விற்றுச் சம்பளம் பெறுகின்றாய். இதையே ஒரு விபச்சாரியும் செய்கின்றாள் என்பதை நீ அறிவாயா?

நீ மனித நேயமேயற்றவனாக இருப்பதால் உனக்கு சம்பளம் மட்டுமல்ல தமிழர் சொத்துக்களையும் நீ கொள்ளையடிக்கின்றாய். இதனால் நீ ஒரு சாதிபதியாகவும் மாறலாம். அத்தோடு நீ வக்கிர புத்தியுள்ள காமுகனாக இருப்பதால் பல தமிழ் பெண்களைக்கூட நீ மானபங்கம் செய்கின்றாய். இவற்றையும் நீ உனது வரவில் சேர்த்துக் கொள்ளலாமோ! ஆனால் நீ ஒருபோதும் மக்களின் மனதில் ஓர் இடமோ, வரலாற்றில் ஓர் இடமோ பிடித்துவிடப் போவதில்லை.

அடக்குமுறை ஆட்சியாளர்கள் பற்றியும், அவர்களின் கூலிப்பட்டாளத்தினர் பற்றிய குறிப்புக்களையும் நீ வரலாற்றுப் புத்தகங்களில் புரட்டிப் பார். கொடுங் கோலர்கள் பாதகர்கள் என்றே குறிப்புக்கள் உள்ளன. இன்றைய ஜேர்மனியர்கள் ஹிட்லர் ஆட்சி ஜேர்மனியில் ஒரு காலத்தில் இருந்ததற்காக இன்றும் வெட்கப்படுகின்றார்கள். அதாவது உன் செயலுக்காக உன் சந்ததி வெட்கப்படுமேயொழிய பெருமை கொள்ளாது.

அதேவேளை நீ விடுதலைப் போராளிகளின் குறிப்புக்களையும் புரட்டிப்பார். அவர்களின் தன்னலமற்ற சேவையும், தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் தமது மக்களுக்காக அவர்கள் அர்ப்பணித்ததையும் காண்பாய். அந்தப் போராளிகளின் அர்ப்பணிப்பால் அவர்களின் சந்ததியினர் இன்றுசுதந்திர புருஷர்களாக சந்தோஷத்துடன் வாழ்வதைக் காண்பாய்.

அன்று அம்மக்களின் கண்களில் நிறைந்திருந்தவர்கள் கதைகளை இன்று காதுகள் இனிக்கக் கேட்டுக்கொண்டு இருக்கின்றார்கள்.

அத்தோடு உனக்கு வேறொன்றையும் நாம் சொல்லி வைக்க வேண்டும். அடக்குமுறையாளர்களும் அவர்களது கூலிப்படைகளும் எப்பொழுதும் நிம்மதியாக வாழ்ந்ததில்லை. உங்களுடைய தலையணைகளுக்குள் எப்பொழுதும் வெடிகுண்டுகள் இருக்கலாம்.

உனது துண்டுப் பிரசுரத்தில் மூலம் மக்களுக்கு நீ மாணபயம் ஊட்டுகின்றாய். ஆனால் படுகொலைகளால் சுதந்திரப் போராட்டங்களுக்கு அணை போடப்பட்டதாக உலக வரலாறு இல்லை. போராளிகள் உயிர் வாழ்வது குறுகிய காலமாக இருக்கலாம். ஆனால் தம் உயிருக்காக உரிமைகளை விற்றவர்கள்விடுதலைப் போராளிகளாக இருந்ததில்லை என்பதை நீ அறிவாயா?

## ஈராக் மீதான விமான போக்குவரத்து தடை

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள்சபை ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளும் குவைத் மீது ஈராக் மேற்கொண்ட ஆக்கிரமிப்பை கண்டித்து அதன்மீது விமானப் போக்குவரத்துத் தடையை அமுலுக்கு கொண்டுவருமாறு வற்புறுத்தி உள்ளன.

இந்தத் தடை நடவடிக்கை பற்றிய தீர்மானம் இன்று நடைபெற இருக்கும் பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட உள்ளது.

இந்த வாக்கெடுப்பில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு வெற்றிகிடைக்குமிடத்து வைத்திய மருந்துப் பொருள் விநியோகம் அவசர உணவுப்பொருள விநியோகங்களை தவிர்த்து ஏனைய எந்த உதவியும் ஈராக்கிற்கு தடை செய்யப்படும்,

# நெருக்கடி கால விவசாய ஆலோசனைகள்

தற்போது ஏற்பட்டுள்ள போர்க்கால நிலைமைகளால் தமிழீழத்துவிவசாயமக்களுக்கு உரவகைகள் பீடை நாசினி வகைகள் போன்றவற்றின் தட்டுப்பாடு அதிகமாக உள்ளது.

எனவே அவற்றுக்கான பதிலீடுகள் அவசியமாக உள்ளது. எம்மிடையே உள்ள மூல வளங்களைப் பயன்படுத்தியே நாம் பதிலீடுகளைத் தேட வேண்டியுள்ளது அந்தவகையில் முதலாவதாக கூட்டெரு தயாரித்தல் பற்றியும், பயன படுத்தல் பற்றியும் இங்கு சில குறிப்புக்களைத் தருகின்றோம்.

கூட்டெரு:

**அ: கூட்டெரு பாவிப்பதால் ஏற்படும் நன்மைகள்:**

1. பயிர் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா மூலகங்களையும் ஐதாகக்கொண்டுள்ளதுடன உடனடியாகப் பயிர்களுக்குப் பாவிக்கக்கூடிய நிலையிலும் காணப்படுகிறது.

2. மண்ணின் இழைய அமைப்பை மேம்படுத்துவதுடன் நீரைப் பற்றிவைக்கும் தன்மையையும்அதிகரிக்கிறது.

3. கூட்டெரு உருவாகும் போது ஏற்படும் வெப்பத்தில் களைவிதைகள், பீடைகளின் வித்திலிகள், நோய்க்காரணிகள் என்பன கட்டுப்படுத்தப் படுகின்றன.

4. கழிவுகளைக் கூட்டெரு தயாரிப்பதில் பயன்படுத்துவதால் சூழல் மாசடைதல் தடுக்கப்படுகிறது.

5 வீணே அழிந்து போகும் கழிவுப்பொருட்களை பயனுள்ள கூட்டெருவாக மாற்றுவதால் பயிர்களுக்குத் தேவையான போசணைப் பொருட்களைப் பெறலாம்.

**ஆ கூட்டெரு தயாரிக்கத் தேவையான மூலப்பொருட்கள்:-**

1 இலை குழைகள் (குப்பை கூழங்கள்) பயிர் மீதிகள்.

2. சாம்பல்.

3. கால்நடைக் கழிவுகள் (சாணம், சிறுநீர், சிறுநீர் கலந்தமண்)

4. உக்கிய கூட்டெரு (வசதிப்படின்)

5. போதுமான நீர்.

**இ. தயாரிப்பு முறை:**

1. குழி வெட்டும்போது பக்கங்கள் அண்ணளவாக 45 பாகை சாய்வாகவும், நீளம், அகலம், ஆழம் முறையே 30'X15'X2' ஆகவும் இருக்கத்தக்கதாக அமைத்தல் வேண்டும். இப்பரிமாண குழியின் மூலம் 1–15தொன் கூட்டெருவைத் தயாரிக்கலாம்.

2. குழியின் அடியில் சாம்பலை/சாணத்தை ஒரு படையாக பரவவேண்டும்.

3. சிறு துண்டங்கள் ஆக்கிய இலை குழைகளையும், பயிர் மீதிகளையும் 6'' - 12'' உயரத்திற்குப் படையாக இடவும். இடும்போது முழு நீளத்திற்கும் பரப்பாமல் ஒரு கரையில் 2'- 3' இடைவெளி விட்டு பரப்புதல் நன்று. இவ்வாறு செய்வது இப்பொருட்களைப் புரட்டுவதற்கு இலகுவாக இருக்கும்,

4. இப்படையின் மேல் ஒரு கூடை பச்சைச் சாணம், இரு கை நிரம்பிய மரச் சாம்பல், ஒரு கூடை உக்கிய கூட்டெரு என்பனவற்றை 8 – 10 கலன் நீரில் கரைத்துத் தெளிக்கவும்.

5 இவ்வாறு முழுக் குழியையும் ஒரு கிழமைக்குள் நிரப்பவும். இவ்வாறு நிரப்பிய குழியை வைக்கோல்/கிடுகு போன்றனவற்றால் மூடவும்.

6. கீழ்ப் படையை மேல் படைக்கு வரத்தக்கதாகப் புரட்டும் போது தேவைக்கேற்ப நீர் தெளிக்கவும். ஒவ்வொரு புரட்டுதல் முடிவடைந்தவுடன் சாணிக் கரைசல் தெளித்து (வசதிக்கேற்றவாறு) மூடவும்.

குழியை நிரப்பியபின் 2ஆம் 4ஆம், 8ஆம் கிழமைகளில் புரட்டுதல் வேண்டும்.

இறுதிப் புரட்டலில் இருந்து ஒரு மாத காலத்தின் பின் கூட்டெருவைப் பாவிக்கலாம்.

**(ஈ) பாவனை**

1/2-1 றாத்தல்,சதுர அடிக்கு என்ற வீதத்தில் பாவித்தால் கூடிய பயனைப் பெறலாம்.

குறிப்பு:

இடவசதி கிடைக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ஆகியவற்றின் தொகையைப் பொறுத்து குழியின் பருமன் (கனவளவை) மாற்றியமைக்கலாம்.

— தமிழீழ ஆய்வு நிறுவனம்

## "தமிழீழம்தான் எமது முடிந்த முடிவு"

### - பம்பைமடுவில் தினேஷ்

(வவுனியா)

தமிழீழம்தான் எமது முடிந்த முடிவு என்று நாம் பல தடவைகள் உணர்த்தியுள்ளோம். இதைப் பெறுவதற்கு விடுதலைப் புலிகள் தயாராகவும், தம்மைப் பலப்படுத்திக்கொண்டும் வருகின்றார்கள் எமது மண்ணை மீட்டெடுக்க போராட்டத்திற்கு மக்கள்தம்மைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

கடந்த 15 ஆம் திகதி பம்பைமடுவில் நடைபெற்ற வவுனியா மாவட்ட கிராம சேவையாளர்களுடனான சந்திப்பின்போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர் திரு. தினேஷ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும் போது, மக்களுக்குச் சேவை செய்வதே உத்தியோகத்தர்களின் பணியே தவிர, உத்தியோகத்தர்களுக்குச் சேவை செய்ய மக்களல்ல; இந்த நிலையை நீக்க வேண்டியது உத்தியோகத்தர்களின் பொறுப்பு. இன்றைய கஷ்ட நிலையில் ஊழியர்கள் மக்களுக்கு பல வடிவங்களில் சேவை செய்ய வேண்டும்.

போராட்ட காலத்தில் தோல்வி, வெற்றி மாறி மாறி ஏற்படலாம். ஆனால் இறுதியில் நாமே வெற்றி பெறுவோம்.

இன்று பலத்துடன் நாம் வெற்றி பெறுவோம் என்று உணர்ந்து கொண்டவனே எமது மண்ணில் இருக்கிறான். மீதிப்பேர் இந்தியாவிற்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் ஓடிவிட்டனர்.

கிராம சேவையாளர்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் தமது சேவைகளின் மூலம் விடுதலைப் போராட்டத்திற்கு பங்களிப்புச் செய்துகொண்டிருக்கின்றனர்.

அரசால் எமது பிரதேசத்தில் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருக்கும் இந்தச் சமயத்தில் மக்கள் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு குடும்பமும் தமது தேவையை தாமே பூர்த்தி செய்து கொள்கிற உற்பத்தியில் ஈடுபட்டால், எம்மை எவராலும் நசுக்க முடியாது.

நகரப் பகுதியிலிருந்து அல்லல்பட்டு அகதிகளாக வந்துள்ள மக்களை மீண்டும் நகரப்பகுதிக்கு அழைத்து நிவாரணம் கொடுப்பது அரசின் திட்டமிட்ட, நியாயமற்ற வேலையாகும். இதற்கு எந்த ஊழியர்களும் துணை போகக் கூடாது என்றார்.

(தி)

## பூநகரியில் சைக்கிள் மலிவாம்

(பூநகரி)

பூநரியில் சைக்கிள்கள் மலிவான விலையில் விற்பனையாகின்றனவாம் யாழ்-கொழும்பு பஸ்சேவை, மற்றும் தூர இட பஸ்சேவைகள் ஸ்தம்பிதமடைந்துள்ள நிலையில், பிரயாணிகள் யாழ்ப்பாணத்தில் சைக்கிள்களை வாங்கி அவற்றில் பூநகரி மட்டும் பிரயாணம் செய்கிறார்கள். பின்பு சைக்கிள்களை அரைவிலை, கால் விலைக்கு விற்றுவிட்டுப் பிரயாணத்தை வேறு வாகனங்களில் தொடர்கிறார்கள்.

### வளைகுடாப் பதற்ற நிலை

## உலகபொருளாதார விளைவை பலவீனமாக்கக் கூடும்

### ஐ.எம். எவ். அறிக்கை

வளைகுடா நாடுகளிடையே ஏற்பட்டுள்ள பதற்ற நிலையினால் ஏற்பட்டுள்ள எண்ணெய் விலை ஏற்றம் உலகப் பொருளாதார விளைவுகளை பலவீனமாக்கக்கூடும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

குவைத் நாட்டை ஈராக் ஆக்கிரமித்ததை தொடர்ந்து உலக எண்ணெய் விலைகள அதிகரிப்பைக் கண்டுள்ளது. இந்த அதிகரிப்பானது பல அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளை பெருமளவில் பாதிக்கும் கடன் சுமையை கொண்டுள்ள நாடுகள், உலகில் குறைந்த வருவாயைப் பெற்றுக் கொள்ளும் நாடுகளை இந்த எண்ணெய் விலை அதிகரிப்பானது பெருமளவில் பாதிக்கும் என்று உலக பொருளாதார கண்ணோட்டம் பற்றி வெளியிட்ட அறிக்கையில் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

**ஏனைய நாடுகள் சப்ளைகளை அதிகரிக்க வேண்டும்**

எண்ணெய் விலைகளின் எதிர்காலம் தற்போது நிச்சயமற்றதாக உள்ளது இதனை 1991ஆம் ஆண்டளவிலாவது சரி செய்வதற்கு ஈராக் மற்றும் குவைத்திலிருந்து தடைப்பட்டுள்ள எண்ணெய் வழங்கல் அளவுக்கு இவ்விரு நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகள் உற்பத்தி செய்ய வேண்டும். இதன் மூலமே 1991ஆம் ஆண்டளவில் எண்ணெய் விலையை குறைக்க முடியும் என்றும் அது தெரிவித்துள்ளது.

# "ஒரு இனத்திற்குத் தற்காத்துக் கொள்ளப்போரிடும் உரிமையுண்டு"

(கொழும்பு)

ஒரு இனத்தை அழிப்பதற்குச் செயற்படுபவர்களுக்கு எதிராக, அந்த இனம் தன்னை அழிவிலிருந்து பாதுகாக்க தற்காப்பு நடவடிக்கைகளில் இறங்க உரிமையுண்டு என்பது உண்மை. நாடு சுதந்திரம் பெற்றது முதல் தீர்க்கப்படாதிருந்த பிரச்சினைகளான பாரிய பொருளாதார ஏற்றத்தாழ்வு, திட்டமிடப்பட்ட பாகுபாடு, போலியான விருப்பு வெறுப்புக்கள், லஞ்சம், ஊழல் ஆகியவற்றின சேர்க்கையும், அரசாங்கத்தின் தற்பெருமையும் ஒன்று சேர்ந்து பிரச்சினை பூதாகரமாகி இன்றுஒரு புதியதோற்றமாக உருவெடுத்துள்ளது என நீதி, சமாதானம், மனித அபிவிருத்திக்கான தேசிய கத்தோலிக்க ஆணைக்குழு கொழும்பில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ்வறிக்கையில்; வடக்கிலும் கிழக்கிலும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அத்தியாவசிய உணவு வகைகள், மருந்து, வேறு நிவாரணங்களை பாரபட்சமற்ற முறையில் வழங்குமாறும் சர்வதேச நியமனங்களுக்கமைய யுத்தத்தினால் பாதிப்புக்குள்ளானவர்களை நடாத்தும்படியும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நகருக்குள் செல்வோருக்கு அடையாள அட்டையாம்

(வவுனியா)

பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட அரசாங்க ஊழியர்கள் பலர் பூந்தோட்டம், குடியிருப்பு வழியாக வவுனியா நகரப் பகுதிக்கு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட உள்ளது.

வேலை நேரத்தில் நகரப் பகுதி செல்லும் அரச ஊழியர்களும், ஆசிரியர்களும், சீருடை அணிந்து பாடசாலை செல்லும் மாணவர்களும் மேற்படி வீதி வழியாக நகரப் பகுதி செல்வதற்கு அனுமதி அட்டை வழங்கப் படுமாம்.

ஆனால், பொதுமக்கள் எவரும் அவ்வீதிவழியாக நகரத்திற்குச் செல்ல அனுமதிக்கப் படமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது வவுனியா மக்கள் பூந்தோட்டம்சென்றுவவுனியா குளவெளிப் பகுதி ஊடாக வவுனியா நகரம் சென்று, வருகின்றனர்.

இனிவரும் காலம் மாரி காலம் என்பதால் இப்பாதை வழியாகச் செல்வதற்கு சிரமங்கள் ஏற்படலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## தூக்கில் தொங்கிய வயோதிபர்

வவுனியா பூந்தோட்ட பகுதியில் முருங்கை மரத்தில் தூக்கில் தொங்கி இறந்த நிலையில் முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

இப்பகுதி வீடொன்றில் வேலை செய்து வந்த இந்த முதியவர், வீட்டுக்காரர் இந்தியா சென்ற பின் விரக்தியடைந்து காணப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

## பொதுசன உதவிப்பணம்

(யாழ்ப்பாணம்)

அத்தியடி, ஆனைப்பந்தி, யாழ். ஆஸ்பத்திரி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் தபாற்கந்தோர் ஆகியவற்றில் பொதுசனஉதவி மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்கள் யாழ்.பெரியகடை கிராமசேவகரான கா.சிவராசாவிடம் இருந்து இன்று காலை 10 மணிக்கு 34/1, உடையார் லேன், பழம் வீதி, கந்தர் மடம் என்னும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## சமுகம் கொடுக்கவும்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் யாழ்நகரக் கிளைகளிலும், பிரதேச காரியாலயத்திலும் பணியாற்றும் சகல ஊழியர்களையும் நாளை சனிக்கிழமைகாலை 9.30 மணியளவில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் சமுகமளிக்குமாறு மக்கள்வங்கியின்பிரதேச முகாமையாளர் வேண்டியுள்ளார்.

## நீர்வேலியில் தொடர்ந்து மூன்றாம்நாள் குண்டு வீச்சு

நீர்வேலிக் கிராமத்தில் மூன்றாவது தடவையாக நேற்று நண்பகல் 12-20 மணியளவில் இரண்டுபொம்மர்கள் வானில் வட்டமிட்டு செவிகண்ணாடித் தொழிற்சாலையை நோக்கி நான்குதடவைகள் குண்டுகளைப்போட்டன. இக் குண்டு வீச்சினால் கிளாஸ் தொழிற்சாலைக்குரிய கட்டடங்கள் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளன தொழிற்சாலைக்குள் தரித்து நின்ற இரண்டுலொறிகள் முற்றாகச் சேதமாயின, வளவிற்குள் இருந்த வைக்கோல்கும்பிகள் தீப்பற்றி எரிந்தன. தொழிற்சாலைக்குள் இருந்த பெறுமதிமிக்க பொருட்கள் அனைத்தும் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

தொழிற்சாலையை அண்டியுள்ள செல்வராஜா மாஸ்டர் வீட்டின் ஓடுகள் அதிர்ச்சியினால் உடைந்து காணப்படுகின்றது. அதேவேளை நேற்று முன்தினம் மாலை இத்தொழிற்சாலையைநோக்கி இரண்டு குண்டுகள் பொம்மர்களினால் போடப்பட்டன; அவை வெடிக்காதநிலையில் நீர்வேலிப் பொறுப்பாளர் திரு. குகன் அவர்களால் மீட்டெடுக்கப்பட்டது தெரிந்ததே.

## வீரமரண அறிவித்தல்




### சபாரத்தினதேசிகர் நந்தகுமார்
(சிறிராம்)

திருக்கோணமலை சாம்பல்தீவைச் சேர்ந்த திரு. சபாரத்தினதேசிகர் நந்தகுமார் (சிறிராம்) 15 - 09 - 90 சனிக்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் வீரமரணம் அடைந்தார். அன்னார் சி. சபாரத்தினதேசிகரினதும் (பண்டாரி அம்மன் கோயில், தம்பசிட்டி) திருமதி ச. மாணிக்கம்மாவினதும் (சாம்பல்தீவு) அன்பு மகனும், சிவகுமார், உதயகுமார் ஆகியோரின் அன்புத் தம்பியும், ஜெயசுதாவின் பாசமிகு அண்ணனும், திருமதி க. வியாழாட்சியினதும் (சாம்பல்தீவு). திரு. மு. சிதம்பரநாதக் குருக்களினதும் (வியாபாரிமூலை) பாசமிகு பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் வியாபாரிமூலையில் நடைபெற்று பூதவுடல் 15 . 09 . 90 சனிக்கிழமையன்று மாலை பருத்தித்துறை இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. சி. சபாரத்தினதேசிகர்
திருமதி ச. மாணிக்கம்மா;

வியாபாரிமூலை,
பருத்தித்துறை.
(B/1407)




இதை வரைந்தவர் எம்முடன் தொடர்புகொள்ளவும்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## மோஸாட்டின் உதவியுடன் மகாவலியில் ஜே. ஆர். மோசடி

மேலும் அப்புத்தகத்தில் மகாவலித் திட்டமானது விவசாயிகளுக்கு இடையே பிளவையேற்படுத்தும் திட்டம் என்றும்,விவசாயிகள் கிளர்ச்சி ஏற்படும் என்று அஞ்சியே இத்திட்டம் வரையப்பட்டதெனவும் அப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கியம் பற்றி உணர்ந்திருந்த ஜே.ஆர் ஜெயவர்தனா இஸ்ரவேலின் உதவியுடன் இத்திட்டத்தை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆக்கலாமென உணர்ந்தவுடன் 1977 இல் இத்திட்டம் முக்கியம் பெற்றதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறிலங்கா வந்த இஸ்ரேலிய குழு உலக வங்கி நம்பும் படியாக மகாவலி திட்டம்பற்றி அறிக்கை தயாரித்ததாகவும் அதனைக் கொண்டு பார்வையிட வந்த உலகவங்கியினர் ஏமாற்றப்பட்டதாகவும், அப்புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டதோடு மகாவலிநிதிப் பணத்திலிருந்து இஸ்ரவேலிடம்கப்பற்படைப்படகுகளும், ஆயுதங்களும் வாங்கப்பட்டதாகவும், அக்காலத்தில் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் மருமகன் மென்னி இஸ்ரவேல் வந்ததாகவும் அப்புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டது.

இவை யாவும்சிறிலங்காவில் இஸ்ரவேலுக்குத் தூதரகம் இல்லாதபோதே நடைபெற்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்திய அணுவிஞ்ஞானிகள் குழு இஸ்ரவேல் விஜயம்

இந்தியாவுடனான உறவுபற்றிக் குறிப்பிடுகையில் பாகிஸ்தான் அணு ஆயுதம் செய்யும் முயற்சியில் 1984இல் தீவிரமாக இறங்கியபோது இந்தியா இஸ்ரவேலின் உதவியை நாடியதாகவும், உயர் விஞ்ஞானிகள்குழுஒன்று இரகசியமாக இஸ்ரவேலுக்கு அழைத்து வரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்விடயததில் இந்தியாவிற்கு தாம் கொடுத்ததைவிட தாம் பெற்றுக்கொண்டது அதிகம் எனவும் அந்த உளவாளி அப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ். நிலைமை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்கள் குறித்தும் கொழும்பு அதிகாரிகளுக்கு அன்ரன் அல்பிரட் விளக்கமளித்ததுடன தாம் பல அறிக்கைகளையும் சமர்ப்பித்ததாக அவர் தெரிவித்தார்.

*மகஜர்கள் உரியவர்களிடம் கையளிப்பு*

அண்மையில் யாழ். அன்னையர் முன்னணியால் நேரடியாக யாழ். அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்ட மகஜரை தாம் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளரிடம் நேரடியாக கையளித்ததாகவும் கூறினார்

மேலும் யாழ் பிரஜைகள் குழுவால்தம்மிடம் தரப்பட்ட கடிதத்தை ஜனாதிபதியின் வெளிநாட்டு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனிடம் கையளித்ததாகவும் அவர் கூறினார்

*பிரட்மன் ஏற்றார்*

பிரட்மன் வீரக்கோனுடன் தாம் கலந்து கொண்ட ஓர் உரையாடலில் வடபகுதி மக்களுக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக வழங்கும் உணவு பங்கீட்டில் தமிழீழவிடுதலைப்புலிகள்எதுவித தலையீடும் செய்யமாட்டார்கள் என்பதை உறுதியுடன் கூறிய பொழுது அதனை பிரட்மன் வீரக்கோன் ஏற்றுக் கொள்வதாக தம்மிடம் தெரிவித்ததாக அவர் கூறினார்.

மேலும் யாழ். மாவட்ட மக்களுக்கு மாதாந்தம் பத்தாயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் கட்டாயமாக தேவை என்பதையும் பிரட்மன் பகிரங்கமாக ஏற்றுகொண்டுவிட்டதாக அன்ரன் அல்பிரட் தெரிவித்தார்.

## கூட்டம்

(உடுவில்)

யாழ்ப்பாணஉதவி அரசாங்க அதிபர்கள், திணைக்களத் தலைவர்களுக்கான கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு நல்லூர் பிரதேச சபைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது என யாழ். அரசாங்க அதிபர் அறியத்தந்துள்ளார். (லோ)

## பத்து வீடுகளை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதே தினம் கல்மடு பகுதியில் ஹெலிகொப்டர் தாக்குதல் மேற்கொண்டதில் சிறுவன் ஒருவர் காயமடைந்தான். (தி)

*கப்பல்கள் தொடர்ந்து வரும்*

தற்போது இங்கு நிலவும் உணவுப் பொருட்களின் தட்டுப்பாடும்அவற்றின் விலையேற்றத்தையும் கருத்தில்கொண்டு தொடர்ச்சியாக ஆயிரக்கணக்கான மெற்றிக்தொன் அரிசிமா, சீனி உட்பட பல முக்கிய உணவுப் பொருட்களும் எரிபொருட்களும் வடபகுதிக்குக் கொண்டுவர தாம் ஏற்பாடுகள் செய்து வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

*அரச ஊழியர்களுக்கு இலவச உணவு*

தற்போது நடைபெறும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வேலைக்குச்செல்லாத அனைத்து அரச ஊழியர்களுக்கும் ஒருமாத காலத்துக்கு இலவச உணவு விநியோகம் செய்ய தாம் சிபார்சு செய்து ஒப்புதல் பெற்றுவிட்டதாகவும் அவர் கூறினார். (லோ)

## வெளிநாட்டு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் 10000 குடில்கள்விரைவில் அமைக்கப்பட்டு விடும் எனவும் தெரிவித்துள்ளதுதோடு இதுவரையில் 1,50,000 அகதிகள் தமிழகம் வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துவெளியிட்ட ராமதாஸ் தமிழ் அகதிகளுக்கான வேலைவாய்ப்புகள் பற்றி தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், ஆனால் அவர்கள் கடலில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.